# அழிவின் விளிம்பில் புலிச்சிலந்திகள்

# Tiger Spiders in Peril



Photo: A. Josh

© LIFE Trust-India. 2020

வெளியிடுவோர்: லிவ்விங் இன் ஃபைன் என்விரான்மென்ட் டிரஸ்ட் (லைஃப் டிரஸ்ட்-இந்தியா)
உபயதாரர்: யு. எஸ். ஃபிஷ் அண்ட் வைல்ட்லைப் சர்வீஸ் (USFWS)
ஆக்கம் மற்றும் வடிவம்: மு. முஹம்மது ஆஷிக், லூ. இசைஅரசு
ஆக்கத்தில் உதவி: அ. ஜோஷ்

தொடர்புக்கு: லைஃப் டிரஸ்ட்-இந்தியா
1/200/F8, குரு காலனி, சிவகாசி மேற்கு, தமிழ்நாடு - 626124, இந்தியா.
மின்னஞ்சல்: indialifetrust@gmail.com

Publisher: Living In Fine Environment Trust-India (LIFE Trust-India)
Sponsor: US Fish and Wildlife Service (USFWS)
Concept and Design: M. Mohamed Ashik, L. Isaiarasu
Technical Assistance: A. Josh

Contact: LIFE Trust-India
1/200/F8, Guru colony, Sivakasi west, Tamil Nadu - 626124, India.
E-mail: indialifetrust@gmail.com

LIFE Books: 2

# புலிச்சிலந்தி ஓர் அறிமுகம்

சிலந்திகள் எட்டுக் கால்களை உடைய 'அரினே' (Areneae) வகுப்பில் கணுக்காலிகள் (Arthropods) தொகுதியைச் சேர்ந்தவை. அதில் புலிச்சிலந்திகள் 'மேகலோமார்ப்' (Mygalomorph) எனப்படும் பெருஉடல் இனத்தைச் சார்ந்தவை ஆகும். சிலந்தியைப் பொதுவாக எட்டுக்கால் பூச்சி எனத் தமிழில் அழைப்பதால் இவைப் பூச்சியினத்தினைச் சார்ந்தவை என்ற தவறான புரிதல் பொதுவாக உள்ளது.

நாம் கானும் பெரும்பாலான சிலந்திகள் உருவத்தில் சிறியவை, ஆனால் புலிச்சிலந்தி என அழைக்கப்படும் பெருஉடல் சிலந்திகள் 16 செ.மீ. முதல் 20 செ.மீ. நீளம் வரை வளரக்கூடியவை. இந்த நீளத்தை ஒரு முழு நீளப் பென்சிலின் அளவிற்கு ஒப்பிடலாம். புலிச்சிலந்திகள் இரவில் நடமாடுபவை. இவை மரப்பொந்துகளுக்குள்ளும், மரப்பட்டைகளுக்கு அடியிலும், மரப்பிளவுகளின் இடையிலும் தங்கி வாழ்கின்றன.

பெருஉடல் புலிச்சிலந்திகளின் உடலில் முடிகள் நிறைந்து காணப்படும். அவற்றின் உடல் வெண் சாம்பல், மஞ்சள், கருப்பு நிற வரிப்பட்டைகள் மற்றும் கோடுகளினால் ஆனதால் அவை ஒன்றிணைந்து மாறுபட்ட பற்பலத் தோற்றங்களை உருவாக்குகின்றன. புலிச்சிலந்திகள், பிற சிலந்திகள் போலத் தம் இரையைப் பிடிக்க வலைகளைப் பிண்ணி பயன்படுத்துவதில்லை. மாறாக, சிறந்த வேட்டையாடும் உத்தியைக் கையாள்கின்றன. இவை தன் நச்சுக்குரடுகளின் உதவியுடன் இரையைப் பிடித்து நஞ்சைச் செலுத்தி இரையுயிரிகளின் மைய மற்றும் புற நரம்பு மண்டலத்தைச் செயலிழக்கச் செய்து உண்கின்றன.



## புலிச்சிலந்தி இனங்களை அறிந்து கொள்வோம்

தமிழில் 'புலிச்சிலந்தி' என அழைக்கப்படும் பேருடல் சிலந்திகள் 'பொசிலோதீரியா' எனும் பேரின அறிவியல் பெயரில் அறியப்படுகின்றன. உலகளவில் இதுவரை கண்டறியப்பட்டுள்ள 15 வகையான புலிசிலந்திகளில் இந்தியாவில் ஒன்பது வகையும், இலங்கையில் எட்டு வகையும் உள்ளன. இவற்றில் இரண்டு வகையான சிலந்திகள் மட்டுமே இவ்விரண்டு நாடுகளிலும் பொதுவாகக் காணப்படுகின்றன.

## இந்தியாவில் காணப்படும் புலிச்சிலந்தி வகை

இந்திய சிங்காரப் புலிச்சிலந்தி - - - - - - - - - - - - - - - - - - - - -பொசிலோதீரியா ரீகாலிஸ்

சேலம் சிங்காரப் புலிச்சிலந்தி - - - - - - - - - - - - - - - - - - - - - -பொசிலோதீரியா ஃபார்மோசா

திருவிதாங்கூர் கருஞ்சிவப்பு சிங்காரப் புலிச்சிலந்தி - - - - - -பொசிலோதீரியா ரூஃபிலேட்டா

ராமேஸ்வர சிங்காரப் புலிச்சிலந்தி- - - - - - - - - - - - - - - - - - -பொசிலோதீரியா ஹனுமவிலாசுமிகா

ஃகூட்டி சிங்காரப் புலிச்சிலந்தி - - - - - - - - - - - - - - - - - - - - பொசிலோதீரியா மெட்டாலிக்கா

மைசூர் சிங்காரப் புலிச்சிலந்தி - - - - - - - - - - - - - - - - - - - - -பொசிலோதீரியா ஸ்ட்ரையேட்டா

அனந்தகிரி சிங்காரப் புலிச்சிலந்தி - - - - - - - - - - - - - - - - - -பொசிலோதீரியா டிக்ரினாவெஸ்ஸலி

மன்னார் வெளிர்பச்சை சிங்காரப் புலிச்சிலந்தி - - - - - - - - -பொசிலோதீரியா விட்டேடா

வங்காளச் சிங்காரப் புலிச்சிலந்தி - - - - - - - - - - - - - - - - - - -பொசிலோதீரியா மிராண்டா



மன்னார் வெளிர்பச்சை சிங்காரப் புலிச்சிலந்தி
பொசிலோதீரியா விட்டேடா



ராமேஸ்வர சிங்காரப் புலிச்சிலந்தி
பொசிலோதீரியா ஹனுமவிலாசூமிகா



அனந்தகிரி சிங்காரப் புலிச்சிலந்தி
பொசிலோதீரியா டிக்ரினாவெஸ்ஸலி



சேலம் சிங்காரப் புலிச்சிலந்தி
பொசிலோதீரியா ஃபார்மோசா



ஃகூட்டி சிங்காரப் புலிச்சிலந்தி
பொசிலோதீரியா மெட்டாலிக்கா



வங்காளச் சிங்காரப் புலிச்சிலந்தி
பொசிலோதீரியா மிராண்டா



இந்திய சிங்காரப் புலிச்சிலந்தி
பொசிலோதீரியா ரீகாலிஸ்



மைசூர் சிங்காரப் புலிச்சிலந்தி
பொசிலோதீரியா ஸ்ட்ரையேட்டா



திருவிதாங்கூர் கருஞ்சிவப்பு சிங்காரப் புலிச்சிலந்தி
பொசிலோதீரியா ரூஃபிலேட்டா

# புலிச்சிலந்திகளின் தோற்றக்கூறு



புலிச்சிலந்திகள் உருவத்தில் பெரியதாக, உடல் முழுவதும் முடிகள் கொண்டதாக, காண்பதற்கு அச்சம் தரக்கூடியதாக இருந்தாலும் பல வண்ணங்களுடன் கூடிய வடிவமைப்பால் காண்போரை வசீகரிக்கும் தோற்றத்துடன் காணப்படுகின்றன. உருமறைப்பு நிற தகவமைப்பின் காரணமாக அவை இரையுயிரிகள் மற்றும் கொல்லுயுரிகளின் பார்வைக்கு எளிதில் புலப்படுவதில்லை.

அச்சுறுத்தல் ஏற்படும் போது புலிச்சிலந்தி தன்னை தற்காத்துக்கொள்ள அதன் முன்னங்கால்களை உயர்த்தி நிற்கும். அவ்வாறு முன்புற இரண்டு இணை கால்கள் மற்றும் உணர்வுறுப்புகளை உயர்த்தி நிற்பதன் மூலம் ஒரு பயங்கரமான தோரனணயை அவை உருவாக்கும். இத்தோற்ற நிலையில் புலிச்சிலந்தியின் நச்சுக்குறடுகளை காணும் எதிரிகளுக்கு ஒருவித அச்சம் உண்டாகின்றது. இதனைத்தொடர்ந்து எதிராளியை மேலும் மிரளச்செய்யும் பொருட்டு நச்சுக்குறடுகள் மற்றும் உறுதியான உணருறுப்புகள் மூலம் ஒலி எழுப்பி எதிராளியின் அச்சத்தை அதிகமாக்கி அதனை எளிதில் வீழ்த்துகிறது.

# உயிரியல்

மேலைநாடுகளில் புலிச்சிலந்திகளை வளர்ப்பு விலங்காக வைத்திருப்பதற்கு அதனுடைய வசீகர தோற்றமும், நீண்ட ஆயுட்காலமுமே காரணம் ஆகும். சராசரியாக பெண் புலிச்சிலந்திகள் 20 வருடம் வரையிலும் ஆண் புலிச்சிலந்திகள் இரண்டு வருடம் வரையிலும் உயிர் வாழும். இனச்சேர்க்கை காலத்தில் ஆண் சிலந்திகள் தன் இணையைத் தேடி இடம் பெயர்ந்து இனப்பெருக்கம் செய்யும். பெண் புலிச்சிலந்திகள் வருடத்திற்கு இரண்டு முறை முட்டையிடும். ஒவ்வொரு முறையும் சராசரியாக 35 முதல் 70 முட்டைகள் வரை இடும். இவற்றில் ஒரு சில சிலந்திகள் மட்டுமே முழு பருவத்தை அடைகின்றன.



புலிச்சிலந்திகள் வளரும்போது தன் தோலை உரிக்கிறது. பெண்சிலந்திகள் பருவம் அடைந்த பின்பும் தோலுரிக்கும். பொதுவாக சிலந்திகள் தரையில் மல்லார்ந்த நிலையில் தோலை உரிக்கும்.

# இந்திய புலிச்சிலந்தியின் பரவல் வரைபடம்

புலிச்சிலந்திகளின் இந்தியத் தீபகற்பத்தில் தென்பகுதியில் குறிப்பாக மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் காணப்படுகின்றன. கீழே உள்ள வரைபடத்தில் புலிச்சிலந்திகள் இந்தியாவில் எங்கெல்லாம் வாழுவதாக இதுவரை கண்டறியப் பட்டுள்ளது என்பதைக் காணலாம்.



பொசிலோதீரியா ரீகாலிஸ்

இச்சிலந்தியானது மகாராஷ்டிரா, ஆந்திரா, கர்நாடக, தமிழ்நாடு, கேரளா ஆகிய ஐந்து மாநிலங்களில் கண்டறியப்பட்டுள்ளது.


பொசிலோதீரியா மெட்டாலிக்கா


இச்சிலந்தியானது இந்தியாவில் ஆந்திரா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் இரண்டு இடங்களில் மட்டுமே கண்டறியப்பட்டுள்ளது.


பொசிலோதீரியா ரூஃபிலேட்டா

இச்சிலந்தியானது மேற்கு தொடர்ச்சி மலையின் தென் பகுதியில் குறிப்பாக கேரளாவிலுள்ள திருவனந்தபுரத்தில் மட்டுமே கண்டறியப்பட்டுள்ளது.

பொசிலோதீரியா விட்டேடா
குறித்த பரவல் தரவுகள் இல்லை.


பொசிலோதீரியா டிக்ரினாவெஸ்ஸலி
குறித்த பரவல் தரவுகள் இல்லை.





இச்சிலந்தியானது இராமநாதபுரம் மாவட்டத்தில் மண்டபம் மற்றும் இராமேஸ்வர தீவில் மட்டுமே கண்டறியப்பட்டுள்ளது.




இச்சிலந்தியானது கிழக்கிந்தியாவின் சத்தீஸ்கர் மாநிலத்திலுள்ள சோட்டா நாக்பூர் என்ற இடத்தில் மட்டுமே கண்டறியப்பட்டுள்ளது.




இச்சிலந்தியானது  தமிழகத்தின் கிழக்கு தொடர்ச்சி மலையின் தென் பகுதியில் குறிப்பாக சேலம் மற்றும் திருப்பதிக்கு அருகாமையிலுள்ள வனப்பகுதியில் மட்டுமே கண்டறியப்பட்டுள்ளது.




இச்சிலந்தியானது இந்தியாவில் கர்நாடக, தமிழ்நாடு, கேரளா ஆகிய மூன்று மாநிலங்களில் கண்டறியப்பட்டுள்ளது.

Source: IUCN

# சந்தையில் புலிச் சிலந்திகள்

பூனை, நாய், மீன், புறா போன்ற விலங்குகளை வீட்டில் வளர்ப்பு விலங்காக வளர்ப்பதை நாம் அறிவோம். அதைப்போல மேலைநாடுகளில் குறிப்பாக ஐரோப்பியா மற்றும் அமெரிக்கக் கண்டங்களில் உள்ள மக்கள் புலிச்சிலந்திகளை ஆர்வத்துடன் தம் வீட்டில் வளர்க்க விரும்புகின்றனர். இதற்குப் புலிச்சிலந்திகளின் வசீகரிக்கும் தோற்றம், உணவு முறை மற்றும் நீண்ட ஆயுட்காலம் போன்றவை காரணமாக இருக்கக்கூடும். இதன் காரணமாகப் பன்னாட்டுச் சந்தையில் அதிக விலைக்கு சட்டவிரோதமாக இவை விற்கப்படுகின்றன. இந்தியா மற்றும் இலங்கையிலிருந்து கடத்திச்செல்லப்படும் புலிச்சிலந்திகளின் தேவை பன்னாட்டுச் சந்தையில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஏற்கனவே மிகவும் குறைந்த அளவில் இருக்கும் இந்தச் சிலந்திகளின் எதிர்காலம் இதனால் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகி உள்ளது.



இவ்வாறு ஒரு குறிப்பிட்ட உயிரினத்தை அதன் வாழிடத்தில் இருந்து தொடர்ச்சியாகப் பிடித்து வர்த்தகம் செய்யும்போது, வெகுவிரைவில் அந்த உயிரினம் பூண்டோடு அற்றுப்போகும் நிலை ஏற்படும். எனவே இத்தகையதொரு அழிவுச்செயலை தடுப்பது உயிரின ஆர்வலர்களின் தலையாய கடமையாகும்.

## அச்சுறுத்தல்கள்

ஓர் உயிரினத்தின் அழிவிக்குக் காரணமாக அமையும் மனிதர்களின் ஊறு விளைவிக்கும் செயலையே 'அச்சுறுத்தல்' எனக் கூறலாம். வாழிடங்களை அழிப்பது, உணவு மற்றும் மருந்தாக பயன்படுத்துவதற்காகவும் வளர்ப்பு விலங்காக வைத்துக்கொள்ளவும் காடுகளிலிருந்து அவற்றைப் பிடிப்பது போன்ற செயல்கள் பெரும் அச்சுறுத்தலாக உள்ளன. மேலும், காடுகள் அழிக்கப்படும்போது ஓர் உயிரினத்தின் வாழிடம் அழிக்கப்பட்டு சுருக்கப்படுகிறது. காலப்போக்கில் இதுவே ஓர் உயிரினம் அதன் வாழிடங்களிலிருந்து பூண்டோடு அற்றுப்போகும் நிலை ஏற்படக் காரணமாக அமைகிறது.

இச்சிலந்திகள் மனிதனின் உயிருக்குத் தீங்கு விளைவிக்கும் எனக்கூறும் கட்டுக்கதைகளை நம்பிச் சிலர் இவற்றைக் கொன்று விடுகிறார்கள். இதுவும் ஒருவகை அச்சுறுத்தலே! இதுவரை இச்சிலந்தி கடித்து ஒருவர் கூட உயிரிழந்ததாக தரவுகள் இல்லை. இச்சிலந்தி கடிப்பதால் வரும் சிறிய அளவிலான வீக்கம் மற்றும் வலி ஒரு சில நாட்களில் குணமாகி விடுவதாக பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர்.



# இந்திய புலிச்சிலந்தியின் காப்பு நிலை


உலகில் உள்ள பல்வேறு உயிரினங்களின் காப்பு நிலை குறித்தான பட்டியலை பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு அமைப்பு அவ்வப்போது வெளியிட்டுவருகிறது, 'சிவப்புப் பட்டியல்' (Red List) என்றழைக்கும் தரவில் அழிவின் விளிம்பில் உள்ள உயிரினங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு, அவற்றைப் பாதுகப்பதற்கான பரிந்துரைகளைச் சுட்டிக்காட்டுகிறது.

உயிரினங்களின் காப்பு நிலை கீழக்கண்டவாறு
பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு அமைப்பினால் வகையினப்படுத்தப்படுகிறது.

| வகையினம் | அர்த்தம் |
|---|---|
| **இன அழிவு நிகழ்ச்சியினால் அற்றுவிட்ட இனம்** (Extinct - EX) | ஓர் உயிரினம் இப்பூவுலகிலிருந்து முற்றிலுமாக அற்றுப்போன நிலை. |
| **இயலிடத்தில் அற்றுவிட்ட இனம்** (Extinct in wild - EW) | ஓர் உயிரினம் தன் இயல்பு வாழிடத்தில் அற்றுப்போன நிலையில், பயிர் செய் கூடத்தில் அல்லது இனப்பெருக்க கூடத்தில் மட்டுமே வாழும் நிலை. |
| **மிக அருகிய இனம்** (Critically Endangered - CR) | ஓர் உயிரினம் அதன் இயல்பு வாழிடத்தில் மிகவும் அச்சுறுத்தலுக்கு உள்ளான நிலை. |
| **அருகிய இனம்** (Endangered - EN) | ஓர் உயிரினம் அதன் இயல்பு வாழிடத்தில் அச்சுறுத்தலுக்கு உள்ளான நிலை. |
| **அழிவாய்ப்பு இனம்** (Vulnerable - VU) | ஓர் உயிரினம் அதன் இயல்பு வாழிடத்தில் அச்சுறுத்தலின் அருகாமையில் உள்ள நிலை. |
| **அச்சுறு நிலையை அண்மித்த இனம்** (Near Threatened - NT) | ஓர் உயிரினம் அதன் இயல்பு வாழிடத்தில் அச்சுறுத்தலுக்கு உட்பட வாய்ப்பு உள்ள நிலை. |
| **அச்சுறு நிலை அற்ற இனம்,** (Least Concern - LC) | ஓர் உயிரினம் அதன் இயல்பு வாழிடத்தில் அச்சுறுத்தல் அற்ற நிலை. |
| **தரவுகள் போதாது** (Data Deficient - DD) | ஓர் உயிரினம் பற்றிய போதியளவு தரவுகள் இல்லாத நிலை. |
| **மதிப்பீடு செய்யப்படாத இனம்** (Not Evaluated - NE) | ஓர் உயிரினம் மதிப்பீடு செய்யப்படாத நிலை. |

| அறிவியல் பெயர் / பொதுப்பெயர் | காப்பு நிலை |
| --- | --- |
| *பொசிலோதீரியா மெட்டாலிக்கா (Poecilotheria metallica)* – ஃகூட்டி சிங்கார புலிச்சிலந்தி | மிக அருகிய இனம் (CR) |
| *பொசிலோதீரியா ஹனுமவிலாசூமிகா (Poecilotheria hanumavilasumica)* – ராமேஸ்வர சிங்கார புலிச்சிலந்தி | மிக அருகிய இனம் (CR) |
| *பொசிலோதீரியா ஃபார்மோசா (Poecilotheria formosa)* – சேலம் சிங்கார புலிச்சிலந்தி | அருகிய இனம் (EN) |
| *பொசிலோதீரியா மிராண்டா (Poecilotheria miranda)* – வங்காள சிங்கார புலிச்சிலந்தி | அருகிய இனம் (EN) |
| *பொசிலோதீரியா ரூஃபிலேட்டா (Poecilotheria rufilata)* – திருவிதாங்கூர் கருஞ்சிவப்பு சிங்கார புலிச்சிலந்தி | அருகிய இனம் (EN) |
| *பொசிலோதீரியா டிக்ரினாவெஸ்ஸலி (Poecilotheria tigrinawesseli)* – அனந்தகிரி சிங்கார புலிச்சிலந்தி | அருகிய இனம் (EN) |
| *பொசிலோதீரியா ஸ்ட்ரையேட்டா (Poecilotheria striata)* – மைசூர் சிங்கார புலிச்சிலந்தி | அழிவாய்ப்பு இனம் (VU) |
| *பொசிலோதீரியா ரீகாலிஸ் (Poecilotheria regalis)* – இந்திய சிங்கார புலிச்சிலந்தி | அச்சுறு நிலை அற்ற இனம் (LC) |
| *பொசிலோதீரியா விட்டேடா (Poecilotheria vittata)* – மன்னார் வெளிர்பச்சை சிங்கார புலிச்சிலந்தி | மதிப்பீடு செய்யப்படாத இனம் (NE) |

## பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு அமைப்பின் வகைப்படுத்தல்



# இந்தியக் கானுயிர் பாதுகாப்புச் சட்டங்கள்

வன உயிர் (பாதுகாப்புச்) சட்டம், 1972 / Wildlife (Protection) Act, 1972
இந்தியப் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட ஒரு சட்டமாகும். இச்சட்டம் வன உயிர்களான விலங்குகள் (மீன்கள், ஊர்வன, நிலநீர் வாழ்வன, பறவைகள், பாலூட்டிகள் மற்றும் முதுகெலும்பு அற்றவை) , தாவரங்கள் முதலியவற்றை பாதுகாக்கின்றது. இச்சட்டத்தில் பாதுகாக்கப்பட வேண்டிய முக்கிய வன உயிரிகள் ஆறு பட்டியல்களின் கீழ் தொகுக்கப்பட்டுள்ளன. பட்டியல் I மற்றும் பட்டியல் II இல் உள்ள வன உயிரிகள் முற்றிலும் பாதுகாக்கப்பட்டவை. இப்பட்டியல்களில் உள்ள உயிரினங்களுக்கு தீங்கு விளைவிப்போருக்கு இச்சட்டம் கடுமையான தண்டனைகளை வழங்குகின்றது. ஜம்மு மற்றும் காஷ்மீரைத் தவிர இச்சட்டம் இந்தியா முழுவதற்கும் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்தும் ஒரு சட்டமாகும்.

உயிர்விரிமச் சட்டம், 2002 / Bio-diversity Bill, 2002. இச்சட்டம் 2002 ஜூன் 5-ம் தேதி ரியோடி ஜெனிரோவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் உயிர்விரிம மாநாட்டில் இந்தியாவால் கையொப்பமிடப்பட்டு இந்தியாவின் 53-வது ஆண்டு பாராளுமன்றக் கூட்டத்தில் இயற்றப்பட்டது. உயிர்விரிமப் பாதுகாப்பு, பயன்படுத்தும் அளவு, செழுமை மற்றும் உயிரின ஆதாரங்கள் மூலம் கிடைக்கும் பயன்களைச் சமபங்கிடுதல் மற்றும் உயிர்விரிமத் தகவல்களை வகை செய்தல் போன்றவையே இச்சட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். இச்சட்டத்தின் அடிப்படையில் பல்வேறு விதிகள் 12 அத்தியாயங்களாகத் தரப்பட்டுள்ளன.



# சிலந்தியும் பழஞ்சொற்களும்

ஒட்டடைக்குச்சி மூலையில்
இருந்தால்சிலந்திக்குக் கொண்டாட்டம்.

சிலந்தி வலை பின்னியது போல்!

சிலந்தி வலையில்சிக்கிச் சீரழியும்
தட்டான்போல

சிலந்திக்கடிக்கு தேள்கொடுக்கு இலைச்சாறு
*(Heliotropicum indicum)*

சிலந்தி தன்சினை கூற்றும்

சிலந்தி வலை மீன்பிடிக்க ஆகுமா?

சிலந்தி வலையினுள்சிறுத்தைப்புலி
அடங்குமா?

சிலந்தி பற்றிய உனக்குத்தெரிந்த ஒரு
பழஞ்சொல்லை எழுதவும்

## புலிச்சிலந்தியும் இல்பொருட் கற்பனையும்

சிலந்திகளின் அறிவியல் குறித்த போதிய தெளிவின்மையால் புலிச்சிலந்தியை மரணத்துடன் தொடர்புபடுத்திக் கூறுவதுண்டு. இதுபோன்ற சிந்தனைகளைக் கொண்டவர்கள் புலிச்சிலந்திகள் பறக்கக்கூடும், அது மனிதனைத் துரத்திச் சென்று கொல்லக்கூடும், அதன் முடிகள் கடுமையான அரிப்புகளை ஏற்படுத்தும், இது ஒரு யானையைக் கூட கொல்லக்கூடும், எனவே அவை பாம்பை விட நஞ்சு கொண்டவை போன்ற பொருள்படத் தவறான சிந்தனைகளைப் பகிர்கின்றனர். இது போன்ற கருத்துக்கள் அறியாமையின் வெளிப்பாடே.

புலிச்சிலந்திகள் நஞ்சைத் தாங்கிய நச்சுக்குறடுகளின் உதவியால் நஞ்சை இரையினுள் உட்செலுத்தி தனக்கு வேண்டிய உணவை வேட்டையாடுகிறது. புலிச்சிலந்திகள் மனிதனின் உயிருக்கு தீங்கு விளைவிப்பதாக் கூறும் கட்டுக்கதைகளை நம்பி சிலர் இச்சிலந்திகளைக் கண்டவுடன் அடித்துக் கொன்றுவிடுகின்றனர். ஆனால் இதுவரை இச்சிலந்தி கடித்து ஒருவர் கூட உயிரிழந்ததாக தரவுகள் இல்லை. இச்சிலந்தி கடிப்பதால் வரும் சிறு வீக்கம் மற்றும் வலி ஒரு சில நாட்களில் குணமாகி விடுவதாக பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர்.

## என்ன செய்ய போகிறோம்!

புத்தகம், வலைதளத்தின் வாயிலாகச் சிலந்திகளைப் பற்றிப் படித்து அறிந்து கொள்வோம்.

நமது வீட்டின் அருகமையில் காணும் சிலந்திகளைக் கவனித்தறிவோம்.

புலிச்சிலந்திகள் மேற்கொள்ளும் இடர்பாடுகளை அறிந்து அவற்றைச் சரி செய்வோம்.

புலிச்சிலந்தி வர்த்தகம் நடக்குமாயின் அவற்றைத் தடுத்து நிறுத்துவோம்.

எனது கிராமம் / நகரதில் உள்ள வனத்துரையினருக்கு புலிச்சிலந்தியின் வர்த்தகம் அல்லது சட்டவிரோதமாக வேட்டயாடுபவர்களின் விவரத்தைத் தெரிவிப்போம்.

புலிச்சிலந்தி பற்றி நாம் அறிந்து கொண்ட அனைத்து விவரங்களையும் நமது நண்பர்களுக்கு எடுத்துக்கூறுவோம்.

அவற்றின் வாழிடங்களை பாதுகாக்கவும் அதன் அச்சுறுத்தல்களை நீக்கவும் உறுதிகொள்வோம்.

லைஃப் டிரஸ்ட்-இந்தியா மற்றும் யு.ஸ்.பிஷ் அண்ட் வைல்ட்லைப் சர்வீஸ் (USFWS) யின் புலிச்சிலந்தி குறித்து வெளியிட்டுள்ள அனைத்துப் பதிப்புகளையும் படித்து நமது அறிவைப் பெருக்கிக் கொள்வோம்.



www.thebts.co.uk/

https://cites.org/eng

www.iucnredlist.org/

https://www.traffic.org/

https://wsc.nmbe.ch/

## விலங்கு குடும்பம்

விலங்கினங்களில் முதுகெலும்பு உள்ளவை, முதுகெலும்பு அற்றவை என இரண்டு வகைகள் உண்டு. விலங்கு குடும்பத்தில் முதுகெலும்பு உள்ளவை மூன்று விழுக்காடும், முதுகெலும்பு அற்றவை 97 விழுக்காடும் உள்ளது.
புலிச்சிலந்திகள் முதுகெலும்பு அற்ற வகையைச் சார்ந்தது. விலங்கினத்திற்கான அச்சுறுத்தல்கள் என்பது பொதுவானவையே, அவ்வாறெனில் எல்லா உயிரினங்களும் காப்பாற்றப்பட வேண்டிய நிலையில் உள்ளன. எனவே
இவ்வினங்களைப்பற்றி நன்கு கற்று அறிந்து அவைகளின் தேவைகளை உணர்ந்து, நாம் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். இவ்வுயிரினங்கள் அனைனத்தையும் காப்பாற்ற வேண்டியது நமது கடமையே!

**யு. எஸ். ஃபிஷ் அண்ட் வைல்ட்லைப் சர்வீஸ் (USFWS)**

வனவிலங்குகள், தாவரங்கள் மற்றும் அவற்றின் வாழ்விடங்களை பாதுகாக்கவும், மேம்படுத்தவும் மற்றவர்களுடன் இணைந்து பணியாற்றும் அமெரிக்க நிறுவனம்.

**லிவ்விங் இன் ஃபைன் என்விரான்மென்ட் டிரஸ்ட் (லைஃப் டிரஸ்ட்-இந்தியா)**

சுற்றுச்சூழல் பாதுகாப்பு, கல்வி மற்றும் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காகவும் செயல்படும் நிறுவனமே லைஃப் டிரஸ்ட்-இந்தியா.







“ஓர் உயிரினத்தின்
அழிவிக்குக் காரணமாக
அமையும் மனிதர்களின்
ஊறு விளைவிக்கும்
செயலையே 'அச்சுறுத்தல்'
எனக் கூறலாம்.
வாழிடங்களை அழிப்பது,
உணவு மற்றும் மருந்தாக
பயன்படுத்துவதற்காகவும்
வளர்ப்பு விலங்காக
வைத்துக்கொள்ளவும்
காடுகளிலிருந்து
அவற்றைப் பிடிப்பது
போன்ற செயல்கள்
பெரும் அச்சுறுத்தல்களாக
உள்ளன.”